செய்தி வெளியீடு எண்: 664 நாள் :07.12.2013

# பத்திரிகை செய்தி

## கோமாரி நோய் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுரையின்படி கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர்களின் ஆய்வுக் கூட்டம் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலக மாநாட்டுக் கூட்ட அரங்கில் இன்று (7.12.2013) மதியம் 2.00 மணியளவில் நடைபெற்றது. மேற்படி ஆய்வுக் கூட்டத்தை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு T.K.M. சின்னையா அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். இக்கூட்டத்தில் அரசு செயலர், முனைவர் S. விஜயகுமார், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, இயக்குநர், முனைவர் R. பழனிசாமி, இ.ஆ.ப. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த அக்டோபர் / நவம்பர் மாதங்களில் தமிழகத்தில், பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்ட கால் மற்றும் வாய்க் கோமாரி நோயின் தற்போதைய நிலை, இந்நோயினைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள், உயிர் பாதுகாப்பு முறைகள், சிகிச்சை அளிக்கப்பட்ட விவரம், கால்நடைகளை பிற இடங்களுக்கு வாகனங்களிலோ அல்லது கால்நடையாகவோ கொண்டு செல்வது, கால்நடை சந்தைகளை மீண்டும் செயல்பட அனுமதிப்பது போன்ற பொருட்கள் குறித்து அனைத்து மண்டல இணை இயக்குநர்களிடமும் மாண்புமிகு கால்நடை பராமரப்புத் துறை அமைச்சர் கேட்டறிந்தார்.

இந்நோயின் தாக்கம் அதிக அளவில் காணப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், வேலூர், புதுக்கோட்டை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தற்போது இந்நோயின் தாக்கம் இல்லை எனவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்நோயினைக் கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக கால்நடைகள் பாதிப்பு தற்போது ஏதும் இல்லை எனவும், கோமாரி நோய் தமிழகத்தில் தற்போது முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் தற்போது நிலவிவரும் தட்பவெட்ப சூழ்நிலையில் கால்நடை நோய்க்கிளர்ச்சிகள் மேலும் ஏற்படாவண்ணம் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் உயிரியல் பாதுகாப்பு மூலம் பிற கால்நடைகளுக்கு நோய் பரவாமல் தடுக்கும் முறையாக 4% சோடியம் ஹைட்ராக்ஸைடு, 4% சோடியம் கார்பனேட், பிளீச்சிங் பவுடர் ஆகியவவை கொள்முதல், விநியோகம், பயன்படுத்திய முறைகள் பற்றியும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

நோயால் பாதிப்படைந்த கால்நடைகளுக்கு அவசர சிகிச்சைக்குத் தேவையான மருந்துகளை வாங்கி வழங்கியதையும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் உதவியாளர் கொண்டு அமைக்கப்ட்ட குழுக்கள் போர்க்கால அடிப்படையில் சிகிச்சைப் பணி மேற்கொண்டதையும் ஆய்வு செய்தார்கள்.

மார்ச் மற்றும் ஏப்ரல் 2014–ல் மேற்கொள்ளப்படும் 6–வது சுற்று தடுப்பூசிப் பணி நிகழ்வுகளில் அனைத்து கால்நடைகளுக்கும் 100% தடுப்பூசி போடப்பட வேண்டும் என்றும், இதற்கென பிரத்தியேகமான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மண்டல இணை இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**